16th February 1959]

Vadasanthoore Block Development Scheme.

* 386 *Q.*—SRI M. A. B. ARUMUGASAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) when the Vadasanthoore Block will be taken under the Block Development Scheme; and

(*b*) the names of the villages which will be included in the Block from Athoor firka, Dindigul taluk?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The Block will be taken up under the Community Development Programme according to the priority drawn up in consultation with the District Planning Board and the number of Blocks allotted by the Government of India from time to time.

(*b*) (1) Sullerumbu;

(2) Gurunathanaickanur;

(3) K. Pudukkottai;

(4) Alagupatti; and

(5) Silvarpatti.

Mails to Thalavadi Hill region

* 387 *Q.*– SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் ஜில்லா தாளவாடி மலைப் பிரதேசங்களுக்கு அனுப்பப்படும் தபால்களனைத்து மைசூர் ராஜ்ஜியத்திலிருக்கும் சாமராஜ நகர் தபால் ஆபீஸ் மூலமாக விநியோகம் செய்ய படுவது நிறுத்தப்பட்டு தாளவாடியிலேயே தபாலாபீஸ் ஏற்படுத்தபபடவேண்டுமென்று சர்க்காருககு மனுக்கள் அனுப்பப்பட்டிருக்கின்றனவா ?

(ஆ) அப்படியாயின் அவைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI P. G. MANICKAM : சார், மைசூர் ராஜ்யத்தில் சேர்க்கப்பட்டு இருக்கும் சாமராஜ நகரில் இருந்துதான் இப்பொழுது தபால்கள் தளவாடிப் பிரதேசத்திற்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இன்னொரு ராஜ்யத்தில் இருக்கக் கூடிய சாமராஜ நகரிலிருந்து தளவாடி மலைப் பிரதேசத்திற்கு தபால் டெலிவரி செய்வதில் அநேக நெருக்கடிகள் இருக்கின்றன. ஆகவே இப்பொழுது தளவாடி பிரதேசத்தில் இருககும் கிளை தபாலாபீசை தலைமை ஆபீசாக மாற்ற சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இம்மாதிரி ஒன்றும் அரசாங்கத்திற்கு முறையீடு வரவில்லை என்று சொன்னேன். மேலும் எல்லைப் பிராந்தியங்களில் இம்மாதிரிப் பிரச்சனைகள் இருக்கத்தான் செய்யும். அதைத் தவிர்க்க முடியாது.

SRI G. G. G RUMURTHI : தளவாடி பிரதேசத்திலும் மற்ற சில கிராமங்களிலும் தபால் ஆபீஸ்கள் திறக்கப்பட்டவேண்டும் என்று மனுக்கள் வந்தனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒரு தகவலும் என்னிடம் வரவில்லை.